ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ செப்டம்பர். 11, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 339 ❖ ரூ.10

ஜி-20 உச்சி மாநாடு 2023 நிறைவடைந்தது அடுத்த மாநாட்டுக்கு பிரேசில் தலைமையேற்கும்

# நிறைவடைந்தது

## ஜி20 கூட்டமைப்பு ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் பற்றிப் பேசுவதற்கு ஒரு நேர்மறையான தளமாக உருவாகியுள்ளது: பிரதமர் மோடி



புதுதில்லியில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டினையொட்டி, இந்திய குடியரசுத் தலைவர் திரெளபதி முர்மு சனிக்கிழமை அளித்த விருந்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டபோது, அமெரிக்க நாட்டின் அதிபர் ஜோ பைடனை சந்தித்து பேசினார். இந்நிகழ்வின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் ஆகியோர் உடனிருந்தனர்.



திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவிலில் ஆவணி மாத நான்காவது வாரத்தை முன்னிட்டு முத்துமாரி அம்மனுக்கு நடைபெற்ற அபிஷேகத்தை தொடர்ந்து சந்தனகாப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார் நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

புதுடெல்லி, செப். 11-

ஜி-20 உச்சிமாநாட்டின் இரண்டாம் நாள் கூட்டம் நேற்று நிறைவடைந்தது. இந்நிலையில் அடுத்த மாநாட்டை நடத்தும் அதிகாரம் பிரேசில் நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜி-20 அமைப்பின் இந்த ஆண்டுக்கான தலைமையை இந்தியா ஏற்றிருக்கிறது. இதையடுத்து, நாடு முழுவதும் பல்வேறு மாநாடுகள் நடைபெற்றன. இந்நிலையில், ஜி-20 உச்சி மாநாடு



டெல்லியில் சனிக்கிழமை தொடங்கியது. இதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் உட்பட பல்வேறு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.


இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று காலை டெல்லி ராஜகாட் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்துக்கு உலகத் தலைவர்கள் வருகை தந்தனர். மழைக்கு நடுவே வருகைதந்த தலைவர்களை பிரதமர் மோடி வரவேற்றார். காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் உலகத் தலைவர்கள் மாநாடு நடைபெறும் பாரத் மண்டபத்துக்கு வந்தனர். அங்கே அவர்கள் மரக்கன்றுகளை நட்டனர். பின்னர் ஜி20 உச்சி மாநாட்டில் முக்கிய கருத்தரங்குகள் நடைபெற்றன.

அதன்தொடர்ச்சியாக ஜி-20 கூட்டமைப்பின் அடுத்த மாநாட்டை நடத்தும் அதிகாரத்தை பிரதமர் மோடி பிரேசில் நாட்டு அதிபரிடம் ஒப்படைத்தார். பின்னர் பேசிய அவர், டிசம்பர் மாதம் வரை ஜி20 தலைமைப் பொறுப்பில் இருப்பதால் நவம்பரில் காணொலி மூலமாக ஒரு கூட்டத்தை நடத்தவிருப்பதாகவும் அறிவித்தார். பின்னர் பிரதமர் மோடி ஜி20 கூட்டம் நிறைவு பெறுவதாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.


மாநாட்டின் இறுதி உரையின்போது பிரதமர் மோடி பேசுகையில், "ஒரே பூமி, ஒரே குடும்பம் பற்றி [செப்டம்பர்9ம் தேதி] நேற்றைய மாநாட்டில் நாம் பேசினோம். இன்று [செப்டம்பர்10ம் தேதி] ஜி20 கூட்டமைப்பு ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் பற்றிப் பேசுவதற்கு ஒரு நேர்மறையான தளமாக உருவாகியுள்ள திருப்தி எனக்கு ஏற்பட்டுள்ளது" என்றார்,



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## 1000-மாவது குடமுழுக்கு விழா நடத்திய

# இறை நம்பிக்கையாளர்கள் போற்றும் இணையற்ற ஆட்சி முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை , செப்.11–

"1000-ஆவது கோயில் குடமுழுக்கு விழாவை மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாதர் கோயிலில் நிகழ்த்தியிருக்கிறது இந்து சமய அறநிலையத் துறை. இறை நம்பிக்கையாளர் அனைவரும் போற்றும் இணையற்ற ஆட்சியாக திமுக அரசு செயல்பட்டு வருகிறது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எல்லார்க்கும் எல்லாம்" என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துத் துறைகளும் அதிவேகமாக வளர்ந்து வருகிறது. குறிப்பாக இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள் அனைத்திலும் சிறப்பாக இருக்கின்றன.



5000 கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் சொத்துக்களை இரண்டு ஆண்டு காலத்தில் மீட்டது திமுக அரசு. இன்றைய நாள்,1000–ஆவது கோயில் குடமுழுக்கு விழாவை மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாதர் கோயிலில் நிகழ்த்தியிருக்கிறது இந்து சமய அறநிலையத் துறை.

இறைநம்பிக்கையாளர் அனைவரும் போற்றும் இணையற்ற ஆட்சியாக திமுக அரசு செயல்பட்டு வருகிறது. இதற்குக் காரணமான இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபுவையும், அதிகாரிகளையும், அலுவலர்களையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன் !, என்று முதல்வர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு வருவதோடு, குடமுழுக்குகள் நடைபெறாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்குகளையும் முழுவீச்சில் நடத்தி வருகிறது. அந்த வகையில், சென்னை, மேற்கு மாம்பலம், காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழா நேற்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றது.

# ஆவுடையார்கோயில் அருகே சித்திரவிடங்கம் ஸ்ரீ விசாலாட்சி ஸ்மேத காசி விஸ்வநாதர்ஆலய மகா கும்பாபிஷேக விழா

ஆவுடையார்கோயில், செப்.11–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் அருகே சித்திரவிடங்கம், ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ மகாலிங்க மூர்த்தி முனீஸ்வரர், ஸ்ரீ பாலமுருகன், ஸ்ரீ விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் மற்றும் பரிகார மூர்த்திகள் திருக்கோவில் அமைந்துள்ளது, இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டு கோயில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று முடிந்தன.



இதற்கென சிறப்பான யாகசாலை அமைத்து வெள்ளிக்கிழமை முதற்கால யாக பூஜை கணபதி ஹோமத்துடன் தொடங்கியது, விழாவின் முக்கிய நாளான நேற்று முன்றாம்காலயாக பூஜை நிறைவுற்று கடம் புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது, கடம் புறப்பாடானது மேளதாளங்களுடன் கோவிலை சுற்றி வலம்வந்தபின் கோபுர கலசத்தை அடைந்தது, சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, சித்திரவிடங்கம் கிராமத்தார்கள், கிராம மிராசுதாரர்கள் மற்றும் தேவா இளைஞர் நற்பணி மன்றம் சுற்றுவட்டார ஆன்மீக மெய்யன்பர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கோபுர தரிசனம் செய்தனர், கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, கும்பாபிஷேக நிகழ்ச்சியில் சுமார் 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.






▶ தென்காசி மாவட்டம் புளியங்குடியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவனத் தலைவர் முத்தமிழன் தி. வேல்முருகன், தமிழக அரசு உறுதிமொழி குழு தலைவர், பண்ருட்டி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சியில் ஆய்வு செய்த பின்பு புளியங்குடி வாழ்வுரிமைக் கட்சி மாவட்டச் செயலாளர் எம். முகைதீன் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் வாழ்வுரிமைக் கட்சியின் மாவட்டத் தலைவர் எம். ராஜேந்திரன், பொருளாளர் எம். செந்தில் முருகன், மாவட்ட துணைச் செயலாளர் சுதாகர், ராஜ், திமுக நகர செயலாளர் அந்தோணிசாமி மற்றும் திரளான கட்சி நிர்வாகிகள் பொதுமக்களிடையே கலந்துகொண்டு மனுக்களை பெற்றார்.

## புதுக்கோட்டை மாவட்ட ரோலர் ஸ்கேட்டிங் அசோசியேசன் சார்பில்

# மாவட்ட அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் போட்டி வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கல்

புதுக்கோட்டை, செப்.11–

புதுக்கோட்டை மாவட்ட ரோலர் ஸ்கேட்டிங் அசோசியேசன் சார்பில் மாவட்ட அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் போட்டி திருச்சி சாலையில் உள்ள டெல்லி பப்ளிக் பள்ளி ரோலர் ஸ்கேட்டிங் மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஐந்து வயது முதல் 17 வயது வரையிலான மாணவ மாணவிகளுக்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடைபெற்றது.




புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 200 மாணவ மாணவிகள் இப் போட்டியில் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு காரைக்குடி அப்போலோ ரீச் ஹாஸ்பிடல் சூப்பிரென்ட் டாக்டர் எல். கோகுலகிருஷ்ணன் பதக்கங்கள் அணிவித்து பாராட்டினார், டெல்லி பப்ளிக் பள்ளி சேர்மன், நாகராஜன் இயக்குனர் பார்கவி உள்ளிட்ட ரோலர் ஸ்கேட்டிங் பயிற்சியாளர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர், இப்போட்டிகளில் தகுதி பெற்ற மாணவ,மாணவிகள் எதிர்வரும் நவம்பர் 1 முதல் 5 வரை சென்னையில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டிகளில் பங்கு பெற உள்ளனர், நிகழ்ச்சியினை புதுக்கோட்டை மாவட்ட ரோலர் ஸ்கேட்டிங் சங்க செயலாளர் ஆர்.எம்.சிவராமன் ஏற்பாடு செய்திருந்தார்.



▶ தென்காசி மாவட்டம்,புளியங்குடி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஒருங்கிணைப்பு விழா நடைபெற்றது, இவ்விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் எஸ். கண்ணன் தலைமை தாங்கினார், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பதிவாளர் சாக்ரடீஸ் சிறப்புரையாற்றினார், ஜெ.பி. கல்லூரியின் முதல்வர் மைக்கேல் மரியதாஸ் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். ஆங்கிலத்துறை பேராசிரியர் ரஞ்சித் குமார் வரவேற்புரை வழங்கினார், வணிக மேலாண்மைத்துறைத் தலைவர் கணேசன் நன்றியுரை வழங்கினார், விழாவிற்கான ஏற்பாடுகளை துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மற்றும் மாணவ மாணவியர்கள்ஏற்பாடு செய்திருந்தனர்.

# இந்தியா, பாரத் சொற்களில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை ராகுல் காந்தி

பாரிஸ் . செப்.11–

இந்தியா, பாரத் என்ற இரண்டு சொற்களிலும் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், இந்தியாவின் ஆன்மாவை சிதைப்பவர்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட பலநாட்டு மாணவர்களுடன் ராகுல் காந்தி உரையாடினார். அப்பொழுது வெளிநாட்டு மற்றும் இந்திய மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் அவர் பதிலளித்து பேசினார்.

அப்போது, இந்தியா vs பாரத் சர்ச்சை தொடர்பாக ராகுல் காந்தி கூறியதாவது: இந்திய அரசியல் சாசனத்தில் இந்தியா, பாரத் ஆகிய இரண்டு சொற்களுமே உள்ளன. அதனால் எங்களுக்கு அந்த இரண்டு சொற்களின் பயன்பாட்டிலுமே எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு இண்டியா என்று பெயர் சூட்டப்பட்டதால் பாஜகவுக்கு இந்தியா என்ற பெயர் எரிச்சலூட்டுகிறது. அதனாலேயே அவர்கள் பெயரைமாற்றமுற்படுகிறார்கள். இந்தியாவின் ஆன்மாவை சிதைக்க நினைப்பவர்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும்.

பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் சிறுபான்மையினரின் பங்களிப்பை முடக்கப் பார்க்கிறது. சிறுபான்மையினர் என்பதாலேயே அவமதிக்கப்படுவார்கள் என்றால் எனக்கு அத்தகைய இந்தியா வேண்டாம். தங்கள் சொந்த தேசத்திலேயே சிறுபான்மையின மக்கள் அசவுகரியமாக உணர்வார்கள் என்றால் அது இந்தியாவுக்கு அவமானம். சீக்கியர்களும், பெண்களும் இன்னும் பிற சிறுபான்மையினரும் உள்ளடக்கிய 20 கோடி மக்கள் அசவுகரியமாக உணர்வார்கள் என்றால் அது நம் அனைவருக்கும் அவமானம் தானே. அது சரி செய்யப்பட வேண்டும் அல்லவா? இவ்வாறாக ராகுல் காந்தி பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர், "பாஜகவின் கொள்கையில் இந்து மதக் கொள்கை ஏதும் இல்லை. நான் பகவத் கீதை படித்துள்ளேன்.உபனிடங்களும் கற்றுள்ளேன். எந்த ஒரு இந்து மத நூலிலும் தன்னைவிட வரியவரை துன்புறுத்தச் சொல்லப்படவில்லை. பாஜகவினர் அவர்கள் கூறிக்கொள்வதுபோல் இந்து தேசியவாதிகள் அல்ல. அவர்கள் அதிகாரத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். பாஜகவின் சித்தாந்தத்தில் இந்து அடையாளம் ஏதுமில்லை" என்றார். மேலும், சீனா உற்பத்தியில் உலக நாடுகளை விஞ்சுகிறது. ஆனால் ஜனநாயகமற்ற முறையில் அதை சாத்தியப்படுத்துகிறது. சீன உற்பத்திகள் இந்தியாவுக்கு மட்டுமல்ல அமெரிக்கா, ஐரோப்பாவுக்கும் அச்சுறுத்தல் என்றார்.



▶ காரைக்கால் மாவட்டத்திற்கு புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு மாதம் இரு சனிக்கிழமைகளில் காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து காரைக்கால் வாழ் பொது மக்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கி வரும் நிலையில் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நாளமில்லா சுரப்பிகளில் ஏற்படும் பிரச்சினைகள் (சர்க்கரை தைராய்டு) சம்பந்தமாக சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் ஏராளமான காரைக்கால் வாழ் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# புதுக்கோட்டையில் நடைபெற்ற வட்டார கல்வி அலுவலர்களுக்கான தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

புதுக்கோட்டை, செப்.11–

தமிழக அரசின் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியம் சார்பில், வட்டார கல்வி அலுவலர் பணிகளுக்கு தகுதி உள்ள நபர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் நேற்று தேர்வுகள் நடைபெற்றது, அதன்படி புதுக்கோட்டைமாவட்டம் அருள்மிகு பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில் நேற்று நடைபெற்ற வட்டார கல்வி அலுவலர்களுக்கான தேர்வினை,மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யாநேரில்பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழக அரசின் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியம் சார்பில், வட்டார கல்வி அலுவலர்களுக்கான பணிகளுக்கு தகுதி உள்ள நபர்களை தேர்ந்தெடுக்கும் வகையில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது, அதன்படி தமிழகம் முழுவதும் நேற்று சீஇஒ தேர்வு நடைபெற்றது.

புதுக்கோட்டையில் அருள்மிகு பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளி, இராணியார் அரசு மேல்நிலைப்பள்ளி, தூய இருதய மகளிர் மேல்நிலைப்பள்ளி, செயின்ட்மேரிஸ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய 4 தேர்வு மையங்களில் நடைபெற்ற தேர்வுகளில் விண்ணப்பித்த 1,134 நபர்களில் 940 நபர்கள் வருகைதந்து தேர்வினை எழுதினர். 194 நபர்கள் தேர்விற்கு வருகை தரவில்லை, மேலும் தேர்வு மையத்திற்குள் கைப்பேசி, கால்குலேட்டர் உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் பயன்படுத்த தடைசெய்யப்பட்டுள்ளது, இத்தேர்வினை முதன்மை கண்காணிப்பு அலுவலர்கள், துறை அலுவலர்கள், அறை கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கண்காணித்தனர்.

இத்தேர்வு நிகழ்வுகளை வீடியோகிராபர்கள் மூலமாக கண்காணித்து தேர்வு நடைமுறைகள் அனைத்தும் வீடியோ பதிவு செய்யப்பட்டது, தேர்வுகள் நடைபெற்று வரும் அனைத்து மையங்களிலும் தேர்வுகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்இத்தேர்வில்எவ்வித முறைகேடுகளுமின்றி தேர்வர்கள் எழுதிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தெரிவித்தார், இந்நிகழ்வில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சங்கரன்கோவிலில் திமுக வடக்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் இலவச மருத்துவ முகாம்

## வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு




சங்கரன்கோவில். செப்.11–

தென்காசி திமுக வடக்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சங்கரன் கோவிலில் உள்ள 36 கிராம சேனைத் தலைவர் பள்ளியில் வைத்து மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமிற்கு தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மணிகண்டன் தலைமை வகித்தார், வடக்கு மாவட்டம் மருத்துவரணி தலைவர் சுமதி முன்னிலை வகித்தார். இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதில் பொது மக்களுக்குசர்க்கரைநோய் பொது மருத்துவம் ,நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ,இருதய நோய்கள், முதுகு வலி, மூட்டு தேய்மானம் மகளிர் நல ஆலோசனை உள்ளிட்ட அனைத்து வகையான பரிசோதனைகள் செய்யப்பட்டு பாதிப்புள்ள நபர்களுக்கு இலவசமாக மாத்திரைகள் வழங்கப்பட்டது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் தங்கவேலு, மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், மாவட்ட பொருளாளர் சரவணன், நகரச் செயலாளர் பிரகாஷ், மாவட்ட விவசாய அணி தலைவர் வெள்ளைத்துரை மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் கே.எஸ்.எஸ்.மாரியப்பன் ,மருத்துவரணி துணைத் தலைவர் பேச்சியம்மாள், மருத்துவ அணி துணை அமைப்பாளர் முத்துக்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் வீமராஜ், ஜலால், வக்கீல்கள் நேரு, ஜெயக்குமார், தகவல் தொழில்நுட்ப பிரிவு சிவாஜி ,கணேஷ், மானூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி முத்தமிழ், ஜெயகுமார், ஜான் மருத்துவர்கள் மணிகண்டன், சுமதி, சத்தியபாலன், செல்வமாரி, பேச்சியம்மாள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்த மருத்துவ முகாமில் பங்கேற்று 500க்கும் அதிகமான பொதுமக்கள் பயனடைந்தனர்.



▶ மயிலாடுதுறை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளரும், பூம்புகார் சட்டப்பேரவை உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் 58 வது பிறந்த நாளை முன்னிட்டு காரைக்கால் தெற்கு சட்டமன்ற உறுப்பினரும், பாண்டிச்சேரி மாநில துணை அமைப்பாளருமான ஏ.எம்.எச்.நாஜீம், தரங்கை பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல், தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி. கமலக்கண்ணன், 9-வது வார்டு கவுன்சிலர் ஜோன்ஸ் செல்லப்பா ஆகியோர் எம் எல் ஏ நிவேதா முருகனுக்கு மாலை மற்றும் கிரீடம் அணிவித்து செங்கோல் வழங்கி பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூறினர்.

# ஆரணி புதிய இருளர் காலனிக்கு டாக்டர் எம்.மூர்த்தியார் நகர் என பெயர் வைத்ததற்கு புரட்சி பாரதம் கட்சி சார்பில் நன்றி



ஊத்துக்கோட்டை, செப்11–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பேரூராட்சிமன்ற 14-வது வார்டு உறுப்பினரும், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவருமான வழக்கறிஞர் கே.சுகுமார் தனது வார்டுக்கு உட்பட்ட புதிய இருளர் காலனி என்பதை டாக்டர் எம்.மூர்த்தியார் நகர் என பெயர் மாற்றம் செய்யக்கோரி பேரூராட்சி மன்ற தலைவர் எம். ராஜேஸ்வரியிடம் கோரிக்கை மனு வழங்கினார்.எனவே, பேரூராட்சி மன்ற மாதாந்திர கூட்டத்தில் தீர்மானம் 306-ன் படி டாக்டர் எம். மூர்த்தியார் நகர் என பெயர் மாற்றம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில்,பேரூராட்சி மன்ற வளாகத்தில் புரட்சி பாரதம் கட்சியின் திருவள்ளூர் வடக்கு மாவட்ட தலைவர் வக்கீல் ராஜா,மாவட்ட பொருளாளர் சிவமணி, முன்னாள் நகரத் தலைவர் மகாலிங்கம்,நகரத் தலைவர் பாஸ்கி,நகரச் செயலாளர் டேவிட்ராஜ்,நகர பொருளாளர் ராமு,வக்கீல் நீலக்கொடிநிஷா, பிரவீன் ஆகியோர் பேரூராட்சியில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, மின்விளக்கு வசதி,சுகாதார வசதி,குடிநீர் வசதி உள்ளிட்டவைகளை போர்க்கால அடிப்படையில் செய்து தரக் கோரி கோரிக்கை மனு வழங்கினர்.

அப்பொழுது பேரூராட்சி மன்றத்தில் டாக்டர் எம். மூர்த்தியார் நகர் என பெயர் மாற்றம் செய்ததற்கான தீர்மான நகலை புரட்சி பாரதம் கட்சி நிர்வாகிகளிடம் பேரூராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் வழங்கினர்.இந்நிகழ்ச்சியின் போது, நியமன குழு உறுப்பினர் டி.கண்ணதாசன், பேரூராட்சி மன்ற உறுப்பினர் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

இந்நிகழ்ச்சியில், எல்லாபுரம் ஒன்றிய செயலாளர் மஞ்சைஇளையா, மாவட்ட இளைஞரணி தலைவர் திருக்கண்டலம் கோவா,கன்னிகை வேந்தன் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, பேரூர்,கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# கேரளாவில் காரை ஏற்றி மாணவனை கொலை செய்த உறவினர்



திருவனந்தபுரம் , செப் 11–

கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் பூவாச்சல் பகுதியை சேர்ந்தவர் அருண்குமார். இவரது மனைவி தீபா. இவர்களது மகன் ஆதிசேகர் (வயது 15). இவன் கட்டக்கடை பகுதியில் உள்ள பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து வந்தான். கடந்த 30-ந்தேதி ஆதிசேகர், அந்தப்பகுதியில் சைக்கிளில் சென்றான்.

அப்போது அந்த வழியாக வந்த கார், சைக்கிள் மீது மோதியது. இந்த விபத்தில் ஆதிசேகர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தான். விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த நிலையில் ஆதிசேகரின் பெற்றோர், போலீசில் ஒரு புகார் கொடுத்தனர்.

அதில் தங்கள் மகன் விபத்தில் சாகவில்லை. அவனது சாவில் சந்தேகம் உள்ளது என குறிப்பிட்டு இருந்தனர். அதன்பேரில் போலீசார் தீவிர விசாரணையில் இறங்கினர். விபத்து நடந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமிரா பதிவுகளை கைப்பற்றி போலீசார் விசாரணை நடத்தினர். இதில் சிறுவன் ஆதிசேகர் சென்ற சைக்கிள் மீது கார் மோதும் காட்சி பதிவாகி இருந்தது. ஆனால் அந்த கார், வேண்டும் என்றே மோதுவது போல் இருந்தது.

இதனால் போலீசார், கார் குறித்து விசாரணை நடத்தினர். இதில் ஆதிசேகர் மீது திட்டமிட்டு காரை ஏற்றி கொலை செய்திருப்பது தெரியவந்தது. சிறுவனின் உறவினரான பூவாசலை சேர்ந்த பிரியரஞ்சன் என்பவர் தான் இந்த கொலை செயலில் ஈடுபட்டுள்ளார் என்பதும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

இதனை தொடர்ந்து போலீசார் அவரை தேடினர். ஆனால் அவர் தலைமறைவாகிவிட்டார். கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தியதில், கடந்த சில நாட்களுக்கு முன்பு பிரியரஞ்சன், கோவில் அருகே அமர்ந்துமது அருந்தியதாகவும் கோவில் சுவற்றில் சிறுநீர் கழித்ததாகவும் அதனை பார்த்த சிறுவன் ஆதிசேகர் மற்றவர்களிடம் கூறியதால் ஏற்பட்ட ஆத்திரத்தில் இந்த சம்பவம் நடைபெற்று இருப்பதும் தெரியவந்தது. தொடர்ந்து பிரியரஞ்சனை போலீசார் தேடி வருகின்றனர்.

# அருள்மிகு திரௌபதி அம்மன் ஆலய தீமிதி திருவிழா



சென்னை , செப் 11–

சென்னை கோவிலம்பாக்கத்தை அடுத்த சுண்ணாம்பு கொளத்தூரில் கோவில் கொண்டுள்ள அருள்மிகு திரௌபதி அம்மன் ஆலய 31ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆவணி மாதம் 22ஆம் தேதி 08.09.2023 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது. முன்னதாக, புதன் கிழமை அன்று கொடியேற்றம் நிகழ்ச்சி அபிஷேக ஆராதனைகளுடன் திருவிழா தொடங்கியது.

நிகழும் சோபகிருது வருடம், ஆவணி மாதம் 22ஆம் வெள்ளிக்கிழமை வளர்பிறை நவமி திதி, திருவாதிரை நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப வேளையில் மாலை தீமிதித்தல் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த விழாவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தீமிதித்தனர். விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மரகதாம்பிகை அறக்கட்டளை தலைவர் மற்றும் ஆலய தலைவர் லயன் சி.மணிமாறன், செயலாளர் சொக்கலிங்கம், பொருளாளர் ஆர்.மாதவன், ஆலய நிர்வாகி மணிகண்ணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். கோவிலம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் கீதா மணிமாறன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்.

மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளர் நிவேதா முருகன் எம்எல்ஏ பிறந்தநாள் விழா

# மனவளர்ச்சி குன்றியோர் காப்பக குழந்தைகளுக்கு உணவு வழங்கிய வார்டு கவுன்சிலர்



தரங்கம்பாடி, செப். 11–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா பொறையாரில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகனின் 58-வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக நிர்வாகிகள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

அதன் ஒருபகுதியாக தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட 6-வது வார்டில் உள்ள கிருபாளையம் மன வளர்ச்சி குன்றியோர் காப்பகப் பள்ளியில் 6-வது வார்டு கவுன்சிலர் செந்தாமரைச்செல்வி ரமேஷ் ஏற்பாட்டில் 35-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல் தலைமையில் வழங்கப்பட்டது. இதில் பேரூர் துணை செயலாளர் மதியழகன் வார்டு திமுக பொறுப்பாளர்கள் அர்ஜுனன், கணேசன், குமார், ரவி, மை.செல்வம், பார்வதி, 9-வது வார்டு கவுன்சிலர் ஜோன்ஸ் செல்லப்பா மற்றும் திமுக பொறுப்பாளர்கள் கவுன்சிலர்கள் உடனிருந்தனர்.

# கந்தர்வகோட்டை அருகே கொத்தகம் ஸ்ரீ மாணிக்க நாச்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா



**கந்தர்வகோட்டை, செப். 11–**

கந்தர்வகோட்டை அடுத்துள்ள கொத்தகம் கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு சித்தி விநாயகர், அருள்மிகு மாணிக்கநாச்சி அம்மன், அருள்மிகு பூர்ண புஷ்கலா சமேத அய்யனார், பெரிய கருப்பு ,சின்ன கருப்பு உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கான குடமுழக்கு விழா நேற்று நடைபெற்றது.

குடமுழுக்கு விழாவை முன்னிட்டு கோயில் முன்பாக யாகசாலை பூஜைகள் நடைபெற்று அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாஜனம், வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரகனம், ரக்ஷா பந்தனம், கும்ப அலங்காரம், வேதிகா பூஜை, விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாஜனம், தனபூஜை , கோமாதா பூஜை, விசேஷ சாந்தி, கும்பா அர்ச்சனை, புர்ணாகதி உள்ளிட்ட நான்கு கால பூஜைகள் நடைபெற்று, சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு புனித நீர் கடத்தினை சிவாச்சாரியார்கள் ஊரின் முக்கிய வீதி வழியாக தலையில் சுமந்து வீதி உலா வந்து சுவாமிகளுக்கு புனித நீர் ஊற்றி குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது, குடமுழுக்கு விழாவை முன்னிட்டு கோயில் வளாகத்தில் அறுசுவை அன்னதானம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது, குடமுழுக்கு ஏற்பாடுகளை கொத்தகம் கிராம ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

# கடலூரில் கட்டிட மேற்கூரை விழுந்து உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை , செப் 11–

கடலூர் மாவட்டம் மருதத்தூர் கிராமத்தில், கட்டிட மேற்கூரை விழுந்த விபத்தில் பலியான சிறுமி சுதந்திரதேவி குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சுதந்திரதேவியின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், மருதத்தூர் கிராமத்தில் உள்ள கோயிலில் நேற்று (செப்.10) காலை கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள கட்டிடத்தின் வெளிப்புற மேற்கூரை எதிர்பாராதவிதமாக ஸ்ரீமுஷ்ணம் வட்டம், காவனூர் கிராமத்தைச் சேர்ந்த சுதந்திரதேவி (15) என்பவர் மீது இடிந்து விழுந்ததில், அவருக்கு காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக வேப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

உயிரிழந்த சுதந்திரதேவியின் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன், என்று முதல்வர் கூறியுள்ளார்.



▶ தென்காசி மாவட்டம் கடையநல்லூர்சுப்பையாபுரம் முப்புடாதி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு தென்காசி வடக்கு திமுக மாவட்ட முன்னாள் செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் மா. செல்லதுரை கலந்து கொண்டு தரிசனம் செய்தார், உடன் கடையநல்லூர் ஒன்றிய செயலாளர் சுரேஷ்,நகரச் செயலாளர் எஸ்.அப்பாஸ், நகர் மன்றத் தலைவர் ஹபிபூர் ரஹ்மான், ஒன்றிய துணை சேர்மன் ஐவேந்திரன்தினேஷ் சுப்பையாபுரம்கிளைச் செயலாளர் ஐயப்பன்,மாவட்ட திட்ட குழு உறுப்பினர் ரா. முருகன், பாலமுருகன், நல்லையா, ஜாகிர் உசேன், காளிமுத்து மற்றும் திமுக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் இரு ஆண் புலிகள் பலி 20 பேர் கொண்ட குழு விசாரணை – ஒரே மாதத்தில் 6 புலிகள் இறந்ததால் அதிர்ச்சி



மஞ்சூர் , செப் 11–

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே எமரால்டு பகுதியில் உள்ள ஆற்றில் மர்மமான முறையில் உயிரிழந்த இரு புலிகளின் உடற்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக மோப்ப நாய் உதவியுடன் 20 பேர் கொண்ட சிறப்புக்குழு விசாரணை மேற்கொண்டு வருகிறது.

நீலகிரிவனக்கோட்டத்துக்கு உட்பட்டது எமரால்டு கிராமம். எமரால்டு அருகிலுள்ள, நேரு நகர் பாலத்தில் இருந்து அவிலாஞ்சி டேம், தண்ணீர் தொட்டிக்கு செல்லும் வழியில் ஆற்றில் மர்மமான முறையில் சனிக்கிழமை மாலை இரு புலிகள் இறந்து கிடப்பதை அப்பகுதி மக்கள் கண்டனர். எனவே, இது குறித்து காவல்துறையினருக்கும் வனத்துறையினருக்கும் தகவல் தெரிவித்தனர். தகவலை அறிந்த நீலகிரி வன அலுவலர் கவுதம் தலைமையில் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று, இறந்த புலிகளின் உடல்களை ஆய்வு செய்தனர்.

ஒரு புலி நீரோடையிலும், மற்றொரு புலி நீரோடையின் கரையிலும் உயிரிழந்து கிடந்தன. இந்நிலையில், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் வழிகாட்டிதலின்படி இரண்டு புலிகளின் உடற்கூறு ஆய்வு நேற்று நடத்தப்பட்டது. மூன்று வன கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் 2 கால்நடை மருத்துவர்கள் உடற்கூறு ஆய்வு செய்தனர்.

இது குறித்து மாவட்ட வன அலுவலர் கவுதம் கூறும் போது, ‘எமரால்டு பகுதியில் இரண்டு புலிகள் இறந்தது தொடர்பாக நடத்தப்பெற்ற பிரேத பரிசோதனையின் இடைக்கால அறிக்கை: இறந்து கிடந்ததில் ஒன்று சுமார் 8 வயதுடைய ஆண் புலி. இந்த புலிக்கு வெளிப்புற காயங்கள் இல்லை. அனைத்து உடல் பாகங்களும், கோரை பற்கள் மற்றும் நகங்கள் உட்பட அப்படியே இருக்கின்றன. வயிற்றில் திரவத்துடன் கூடிய முடி உள்ளது.

இரண்டாவது ஆண் புலிக்கு சுமார் 3 வயதிருக்கும். உடற்கூராய்வில் இந்த புலிக்கு முதுகெலும்பு நெடுவரிசையின் எலும்பு முறிவுடன் முதுகு மற்றும் கழுத்தில் வெளிப்புற காயங்கள் காணப்பட்டன. காயங்கள் மற்றொரு புலியுடன் ஏற்பட்ட சண்டையின் காரணமாக இருக்கலாம். அனைத்து உடல் பாகங்களும் முழுமையாக இருந்தன. வயிற்றில் முள்ளம்பன்றி முட்கள், முடி மற்றும் இரை இனத்தின் இறைச்சி ஆகியவை இருந்தன. தடயவியல் மற்றும் நச்சுயியல் பகுப்பாய்வுக்காக மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இந்நிலையில், புலிகள் இறந்த இடத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான கால்நடை ஒன்றின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆய்வுக்காக அந்த கால்நடையின் உடலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. உதவி வனப்பாதுகாவலர் தேவராஜ் தலைமையில் 20 பேர் கொண்ட சிறப்புக் குழு, மோப்ப நாயுடன் அப்பகுதியில் விசாரணை நடந்தி வருகிறது. இக்குழுவினர் அருகில் உள்ள குடியிருப்புகளில் விசாரித்து தகவல்களை சேகரித்து வருகின்றனர்’ என்றார். புலிகள் விஷம் வைத்து கொல்லப்பட்டுள்ளனவா என கோணத்திலும் வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

புலிகள் தொடர் இறப்பால் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறும்போது, ‘கடந்த ஆகஸ்ட் மாதம் 17-ம் தேதி தேதி முதுமலை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட சீகூர் வனச் சரகத்தில் உள்ள சிறியூர் வனப்பகுதியில் பிறந்து 2 வாரமே ஆன 2 புலிக்குட்டிகள் உயிரிழந்தன. மேலும் முதுமலை வனப்பகுதியில் மற்றொரு இடத்தில் ஒரு புலி இறந்து கிடந்தது.

இதேபோல் நடுவட்டம் பகுதியில் தனியார் தேயிலை தோட்டத்தில் 7 வயதான புலி இறந்து கிடந்தது. இந்நிலையில், தற்போது அவலாஞ்சி வனப்பகுதியில் 2 புலிகள் இறந்து உள்ளன. ஒரே மாதத்தில் நீலகிரி மாவட்டத்தில் 6 புலிகள் இறந்து இருப்பது சுற்றுச்சூழல் ஆர்வலர்களை அதிர்ச்சி அடைய செய்து உள்ளது’ என்றனர்.

# இந்தியா என்ற பெயரை மாற்றக்கூடாது மயிலாடுதுறையில் தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆவேசம்

மயிலாடுதுறை, செப் 11–

மயிலாடுதுறையில் உள்ள தருமை ஆதீனத்திற்கு சொந்தமான புகழ்பெற்ற வதான்யேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றது. தேமுதிக நிர்வாகி இல்ல நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்திருந்த தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆலயத்தில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார். பக்தர்கள் பலர் பிரேமலதா விஜயகாந்திடம் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

தொடர்ந்து தருமபுரம் ஆதீனம் 27 வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளை நேரில் சந்தித்து ஆசி பெற்றார். வைத்தீஸ்வரன்கோவில், வள்ளலார்கோவில் பிரசாதங்களை வழங்கி விஜயகாந்திடம் கொடுக்குமாறும் பூரண நலமடைவார் என்று அருளாசி வழங்கினார். சிறிது நேரம் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கழக பொருளாளர் பிரேமலதா கூறுகையில் சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள் ஆனால் சனாதானத்திற்கு உண்மையான அர்த்தம் என்ன என்பது யாருக்கும் தெரியாது. சனாதானத்தை ஒழிப்பதற்கு மாநாடு என்று சொல்கிறார்கள். ஆட்சியில் உள்ளவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி தமிழ்நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளது. கொசுவை ஒழித்து விட்டோம் டெங்குவை ஒழித்து விட்டோம் என்று உதயநிதி சொல்வது பெரிய விஷயம் இல்லை. வறுமை, லஞ்ச ஊழல், குண்டும் குழியுமாக உள்ள சாலைகள் விலைவாசி உயர்வு டாஸ்மார்க் கடைகளை ஒழிக்க வேண்டும், தமிழ்நாட்டில் மக்களுக்காக ஒழிக்க வேண்டிய விஷயங்கள் நிறைய உள்ளன. இதையெல்லாம் செய்து தமிழ்நாட்டை மக்களுக்கான நாடாக இந்தியாவின் முதன்மை மாநிலமாக நமது தமிழ்நாட்டை கொண்டு வந்தால் அதை நிச்சயமாக நாங்கள் வரவேற்போம்.

இன்றைக்கு உள்ள அரசியல்வாதிகளில் முக்கியமாக திமுக அடுத்த தேர்தலுக்கான அரசியலை தான் செய்கிறார்கள் அடுத்த தலைமுறைக்கான



அரசியலை திமுக செய்யவில்லை. தேர்தலுக்காக உடனே சனாதனம் என்று சொல்கிறார்கள் இதனால் நமக்கு என்ன பயன் என்று கேள்வி எழுப்பினார். இந்துக்கள் கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் இடையே எந்த பாகுபாடும் பிரிவினையும் கிடையாது. தேர்தல் ஆதாயத்திற்காக சனாதானம் என்ற வார்த்தையை சொல்லி பிரித்தாலும் சூழ்நிலையை திமுக உண்டாக்குகிறது. குறிப்பாக உதயநிதி ஸ்டாலின் அதை செய்கிறார். இளைஞரான உதயநிதி புதிதாக அரசியலுக்கு வந்துள்ளார். அவரிடம் இளைஞர்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள் ஆனால் பழைய அரசியலை கையில் எடுக்கிறார்.

நூறாண்டு காலத்திற்கு முன்பேபெரியார் ஜாதிமதத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறியதை செய்யவில்லை. அனைத்தும் கண்துடைப்பு தேர்தல் வந்துவிட்டால் சனாதனத்தை உயர்த்தி பேசி பத்து நாட்களுக்கு விவாதங்கள் நடத்துவார்கள். இதனால் நாட்டுக்கோ மக்களுக்கோ என்ன பலன் என்று கேள்வி எழுப்பிய பிரேமலதா பிரித்தாலும் சூழ்ச்சி செய்து மக்களிடையே பாகுபாட்டையும் வேறுபாட்டையும் ஏற்படுத்தி ஒற்றுமையாக இருக்கின்ற மக்களை திசை திருப்பி குழப்பம் விளைவிக்கும் செயல் என்று கூறினார். பாராளுமன்ற தேர்தலுக்கு உரிய நேரத்தில் எங்களின் நிலைப்பாடு குறித்து தெரிவிப்போம். நூறாண்டு காலத்திற்கு முன்பு நடைபெற்ற சம்பவங்களை உதயநிதி பட்டியலிடுகிறார் கணவன் இறந்தால் யார் இன்று உடன்கட்டை ஏறுகிறார்கள் மொட்டை அடிக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா இதுதான் சனாதனம் என்று அவர்கள் விளக்கம் அளிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் ஒரு உதாரணத்தை அவர்களால் காண்பிக்க முடியுமா எதுவுமே இல்லாததை சொல்கிறார்கள் இன்று நாம் சந்திராயனுக்கும் ஆதித்யா எல் ஒன்னையும் நிலவுக்கும் சூரியனுக்கும் விண்கலயை அனுப்பி கொண்டு உள்ளோம். தற்கால அரசியலைப் பேச வேண்டிய உதயநிதி நூறாண்டு காலத்திற்கு பின்னோக்கி உள்ளார். இதனால் உதயநிதி மக்களின் மிகப்பெரிய வெறுப்பை சம்பாதித்துள்ளார். மக்களின் ரத்தத்திலும் உணர்வுகளிலும் இந்தியா என்ற வார்த்தை ஊறிப் போய் உள்ளது. இந்தியாவின் பெயரை பாரத் என்று மாற்றினால் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒரு நாட்டினுடைய பெயரை மாற்றுவது என்பது கண்டிக்கத்தக்கது. தலைவர் விஜயகாந்த் நலமுடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஆந்திராவில் இருந்து புதுக்கோட்டை வந்த விநாயகர்கள்



இம்மாதம் 18ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட உள்ள சூழலில் நீதிமன்ற உத்தரவுபடி நீர் நிலைகளை அசுத்தம் செய்யாத வகையில் ஆந்திராவில் தயாரிக்கப்பட்டு புதுக்கோட்டை நகரை சுற்றி வைப்பதற்காக இந்து முன்னணி சார்பில் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ள 67 விநாயகர் சிலைகளில் நேற்று முதல் கட்டமாக 11 சிலைகள் புதுக்கோட்டை திலகர் திடலுக்கு வந்தடைந்தது அவற்றை இந்து முன்னணி மாவட்ட தலைவர் வடிவேல் தலைமையிலான நிர்வாகிகள் பார்வையிட்டனர். படங்கள்: டீலக்ஸ் ஞானசேகர்

## நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தல் வந்தால் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் இபிஎஸ்

சென்னை , செப் -11

நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்ற தேர்தல் வந்தாலும், அதை சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.



அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், சென்னை ராயப்பேட்டையில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில், நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மதுரையில் நடைபெற்ற பொன்விழா எழுச்சி மாநாட்டின், மாநாட்டுக் குழுவினரும் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கிவரும் சூழலில், ஒரே நாடு ஒரே தேர்தலை மத்திய அரசு கையில் எடுத்துள்ளது. நடைபெறவுள்ள நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரில், அதுகுறித்த மசோதா தாக்கல் செய்யப்பட்டால், அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு அமைப்புரீதியாக கட்சியை வலுப்படுத்துவது குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும், ஒற்றைத் தலைமை பிரச்சினைக்குப் பிறகு, எடப்பாடி பழனிசாமி தலைமையில் கட்சி வந்துவிட்டதால், இந்த தேர்தலில் கணிசமான இடங்களைப் பிடிக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மக்களவைத் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பேசிய எடப்பாடி பழனிசாமி, மதுரை மாநாட்டுக்குப் பின்னர், தமிழகத்தில் அதிமுக எழுச்சி பெற்றுள்ளதாகவும், தற்போது அதிமுக ஒரே தலைமையின் கீழ் வந்துவிட்டது. நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்ற தேர்தல் வந்தாலும், அதை சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும்" என்று பேசியதாக கூறப்படுகிறது.

இந்த கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், "ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதால், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் உடன் சட்டமன்றத் தேர்தலும் தமிழகத்தில் வருவதற்கான மேகங்கள்தான் கூடியிருக்கிறது. அப்படி தேர்தல் வரும் பட்சத்தில், அதை எதிர்கொள்ள வேண்டும்.

திமுக ஆட்சியில், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவால், அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்கு எல்லாம் மூடுவிழா கொண்டு வரப்பட்டுள்ளது. அம்மா உணவகங்கள் நீர்த்துப்போகக்கூடாது என்பதற்காக அத்திட்டத்துக்கு மூடுவிழா நடத்த முயற்சி நடந்து வருகிறது. மகளிருக்கு ஸ்கூட்டி வழங்கும் திட்டம் காணாமல் போய்விட்டது. அதேபோல், தாலிக்கு தங்கம் அந்த திட்டத்தையும் செயல்படுத்துவது இல்லை" என்று குற்றம்சாட்டினார்.




இந்தியா வார விழாவினை முன்னிட்டு ஜெசிஐ புதுக்கோட்டை, செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரி கிளை இயக்கத்தின் சார்பில் தலைவர் அஜித்குமார் முருகேசன் தலைமையில் புதுக்கோட்டை பேருந்து நிலையம், ரயில் நிலையம், மற்றும் புதுக்கோட்டை நகரில் உள்ள பல்வேறு உணவகங்களிலும் நீரின் தேவை பற்றியும் நீர் சேகரிப்பு பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் செய்தும், சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம் கோட்டூர் அடுத்துள்ள வடக்கு தாழம்பட்டி அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். கும்பாபிஷேகத்தை நான்கு கரை பூசாரிகள் மற்றும் வீர. மு.குடும்பத்தார்கள் மற்றும் ஊர் மக்கள் செய்திருந்தனர்.

## இடஒதுக்கீட்டில் சேரும் மாணவர்களின் கல்வி கட்டணத்தை உயர்த்திட வலியுறுத்தல்




புதுக்கோட்டை , செப் -11

புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளிகள்கூட்டமைப்பின் ஆலோசனை கூட்டம் புதுக்கோட்டையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு புதுக்கோட்டை தனியார்பள்ளிகள் கூட்டமைப்பு தலைவர் ஏ.அசரப் அன்சாரி தலைமை வகித்தார். சென்னை தனியார் பள்ளிகள் சட்ட பாதுகாப்பு இயக்கத்தை சேர்ந்த மனோகரன் ஜெயகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டார். பி.எஸ்.கே. கல்வி குழுமங்களின் தலைவர் பி.எஸ்.கருப்பையா முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மெட்ரிக் பள்ளிகளின் முதல் ஒப்புதல் ஆணை, நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி புதுப்பித்தல் ஆணை, டி.டீ.சி.பி.பெற ஆலோசனை வழங்குவது உட்பட பல விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட நர்சரி பள்ளிகளுக்கு புதுப்பித்தல்ஆணையினை காலதாமதமின்றி வழங்க வேண்டும், கட்டாய கலவி உரிமைச்சட்டத்தின் கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டில் சேர்ந்துள்ள மாணவர்களின் கல்வி கட்டணத்தை உயர்த்தி வழங்க வேண்டும், டி.டீ.சி.பி. நர்சரி பள்ளிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும், மாவட்ட கல்வி அலுவலகத்தில் அவசியம் தபால் பெட்டி வைக்கப்பட வேண்டும், பள்ளிகளின் அலுவல் சார்ந்த கூட்டங்களை தனியார் பள்ளிகளில் நடத்தாமல் முதன்மை கல்வி அலுவலர் தேர்வு கூடத்திலேயே நடத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் கௌரத்தலைவர் ஜெய்சிங், செயலாளர் முத்துக்கருப்பன், ஒருங்கிணைப்பாளர் கே.ரமணன், பொருளாளர் மேசியா சந்தோசம், லண்டன் லுக் பள்ளி டாக்டர் கே.கிருஷ்ணமூர்த்தி, மெட்ரிக் ஓசை ஆசிரியர் கே.டீ.கந்தசாமி, ஆர்ட்ஸ் மற்றும் சயின்ஸ் பள்ளி எஸ்.முருகன், டைமண்ட் பள்ளி டைமண்ட் பஷீர், தாய்தமிழ் பள்ளி மாதவன், மீனாட்சி பள்ளி எம்.ராஜ், கலைமகள் பள்ளி கே.பாண்டித்துரை, ஸ்ரீமுருகேஸ்வரா பள்ளி எம்.சின்னையா, ஜுசஸ் கிங்டம் பள்ளி ஏ.ஜெ.இக்னேசியஸ், சுவாமி விவேகானந்தா பள்ளி பி.கருணாகரன், ஸ்ரீ அம்பாள் பள்ளி ஆலோசகர் ஏ.சரவணன், மருதம் பள்ளி சுப. தமிழ்மாறன், பெருங்களுர் ஸ்ரீ வெங்கடேஷ்வரா பள்ளி வெங்கடேஷ் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். விழாவில் லால் கிதாப் வெங்கடேஷ் எழுதிய டைம் டிராவலர் டான் கிளைவுட் 8023 என்ற புத்தகத்தை தலைவர் அசரப் அன்சாரி வெளியிட சிறப்பு அழைப்பாளார் மனோகரன் ஜெயக்குமார் பெற்றுக் கொண்டார்



மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்டப்பேரவை உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் 58 வது பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு புதுகை வரலாறு சென்னை பதிப்பின் தலைமை செய்தி ஆசிரியர் சு.காதர் உசேன் பொன்னாடை போர்த்தி வாழ்த்துகள் தெரிவித்தார், உடன் மாவட்ட செய்தியாளர் யோகுதாஸ் ராஜா, உள்ளார்.

## கொரோனாவை மிஞ்சிய மொய் விருந்து பதற்றம் கமகமக்குமா மொய்விருந்து விழாக்கள் !

புதுக்கோட்டை , செப் -11

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, வடகாடு, கொத்தமங்கலம், கீரமங்கலம், நெடுவாசல், கறம்பக்குடி தஞ்சாவூர் மாவட்டத்தில் திருச்சிற்றம்பலம், பேராவூரணி, களத்தூர், பட்டுக்கோட்டை, ஒட்டங்காடு, ஆவணம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஆண்டு தோறும் ஆனி, ஆடி மற்றும் ஆவணி மாதத்தில் மொய் விருந்து விழா நடைபெறுவது வழக்கம். இந்த மொய் விருந்தில் டன் கணக்கிலான ஆட்டுக்கறி விருந்து நடத்தப்பட்டு பல நூறு கோடி ரூபாய் மொய் பணம் வசூலிக்கப்படும், இந்த மொய் பணத்திற்கு வரி பிடித்தம் இல்லை மேலும் மொய் விருந்து நடத்தி வசூல் செய்த மொய் பணத்தை ஐந்து ஆண்டுகள் வரை சிறுக சிறுக திருப்பி செலுத்தலாம் என்பதால் அதிக அளவில் இப்பகுதி மக்கள் மொய் விருந்தில் ஆர்வம் காட்டினர்.



இந்த பணத்தை வைத்து விவசாயம், வியாபாரம், தொழில் போன்றவற்றை வளர்ச்சி பாதையில் கொண்டு சென்றனர். ஆனால் காலப்போக்கில் இந்த மொய் விருந்து எந்த அளவிற்கு மொய்த்தொகை அதிகமாக கிடைக்கிறதோ அதை வைத்து மொய் விருந்தாளர்களின் கௌரவம் எடை போட்டு பார்க்கப்பட்டதால் சிறிய அளவில் நடந்து வந்த மொய் விருந்தில் பெரிய அளவிலான தொகை புரளத் தொடங்கியது. ஆயிரக்கணக்கு இலட்சக்கணக்காக மாறி கோடிக்கணக்காக வளர்ந்தது. இதனால் சரியான நேரத்திற்கு மீண்டும் செலுத்த முடியாமல் ஏராளமானோர் தங்களது நிலங்களையும் வீட்டில் உள்ள நகை பொருட்களையும் விற்கும் அவலம் ஏற்பட்டது. இதனால் மொய் விருந்து ஆர்வம் குறைந்து தற்போது பெரும்பாலான பகுதிகளில் மொய் கணக்கு முடிக்கப்பட்டு வருகிறது. கொரோனா காரணமாக இரண்டு ஆண்டுகள் மொய் விருந்து எண்ணிக்கை சற்று குறைவாக இருந்து வந்தது. இந்நிலையில் இந்த ஆண்டு அளவுக்கு அதிகமாக மொய் விருந்து நடத்தப்படுவதாக பரவலாக பேசப்படுகிறது. இதனால் மொய் பணத்தை செலுத்த முடியாமல் மொய் வாங்கியவர்கள் திண்டாடி வருவதாகவும் கூறப்படுகிறது. கொரோனா காலத்தில் இன்று மாலை எத்தனை பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிந்து கொள்ள பதற்றத்தோடு காத்திருந்தது போல இன்று மாலைக்குள் எத்தனை மொய் பத்திரிக்கை வந்து சேரும் என்று பதட்டம் அடைந்து வருவதாக மொய் செய்பவர்கள் புலம்புகின்றனர். இந்நிலையில் மொய் விருந்து பத்திரிகை எண்ணிக்கையை பார்த்து மனம் வெறுத்த நபர் ஒருவர் தனது உறவினருக்கு வாட்ஸ் அப் மூலம் தனக்கு 80 மொய் பத்திரிகை வந்திருப்பதாகவும் இதோடு உலகம் அழிந்துவிட போவது போல் மொய் விருந்து நடத்தப்படுவதாகவும் புலம்பிய ஆடியோ வெளியாகி இப்பகுதி மக்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மொய்விருந்து மூலம் தங்கள் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளதாக சமீபத்தில் மொய்விருந்து விழா நடத்திய களத்தூரை சேர்ந்த நீல. செந்தில் முருகன் கூறியுள்ளார்.

மேலும் இது குறித்து அவர் கூறும் போது, கடந்த 10ஆண்டுகளுக்கு முன்னர், மிகவும் வறுமையினால் வாடியது எங்கள் குடும்பம். தினக்கூலி வேலை செய்த எனது தந்தை கொஞ்சம், கொஞ்சமாக உற்றார், உறவினர்கள், சுற்றத்தார், நண்பர்களுக்கு 70ஆயிரம் ரூபாய் மொய் செய்திருந்தார். பிறகு, நாங்கள் மொய்விருந்து விழா வைக்கும் போது அவர்கள் மூலம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மொய் வந்தது, அதனை கொண்டு நான் டிப்ளமோ படித்த கல்வி கடன் போன்றவற்றை அடைக்க முடிந்தது. ஒருவர் 4 அல்லது 5ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் மொய் வைக்க வேண்டும் எனும் விதி இருப்பதனால், வாங்கும்போது வட்டியில்லாமல் மொய் வாங்கிக்கொண்டு, வாங்கிய மொய்தொகையை நான்காக பிரித்து நான்கு வருடத்திற்கு செய்ய வேண்டும். அதனால் மொத்த தொகையையும் திரும்ப உடனே செலுத்த வேண்டும் என்கிற எந்த கட்டாயமும் இல்லை.

மொய் வாங்கிய பிறகு, அடுத்த நான்கு வருடங்களில் நான் சம்பாதித்த பணத்தை சிறுசேமிப்பு போல் உற்றார் உறவினர்களுக்கு மொய் செய்யும்போது அடுத்தடுத்த மொய்விருந்து விழா வைக்கும்போது அது இரட்டிப்பாக கிடைத்தது. அது எப்படியென்றால், வாங்கிய மொய் பணத்தை நிலையாக வைத்து விடாமல், அதாவது, வீடு கட்டுவது, இடம், பொருள், வாகனம் வாங்குவது இல்லாமல் நாங்கள் செய்யும் சிறுதொழிலில் முதலீடாக போட்டு அதில் இருந்து வரும் லாபத்தை, உறவுகளுக்கு மொய் செய்து வருவதால், 10ஆண்டுகளில் 10மடங்கு வரை எங்களுடைய பொருளாதரம் உயர்ந்திருக்கிறது.

10ஆண்டுகளுக்கு முன்னர், ஒன்றரை லட்சம் பணம்மொய்வாங்கியநாங்கள் சமீபத்தில் 17லட்சம் மொய் வாங்கியது குறிப்பிடத்தக்கது. மொய் செய்வதை கடன் வாங்கி செய்வதினால் பெரும்பாலானோர் சிக்கலில் தவிக்கின்றனர், திட்டமிட்டு செயலாற்றி, சம்பாதித்த பணத்தை மட்டுமே சரியான வகையில், மொய் செய்து வந்தால் நம் வளர்ச்சி பன்மடங்கு உயரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என கூறினார், மொய்விருந்து விழாக்கள் மூலம் கிடைக்கும் பணத்தை சரியான முறையில் முதலீடு செய்து உரிய முறையில் மொய்க்களை திரும்ப செலுத்தினால் மொய்விருந்து விழாக்கள் மேலும் கமகமக்கும், வாங்கிய பணத்தை ஆடம்பரமாக செலவு செய்து உரிய முறையில் மொய்க்களை திரும்ப செலுத்தாவிட்டால் வரும் வருடங்களில் மொய்விருந்து விழாக்கள் படிபடியாக குறைய தொடங்கும் என்பதே பொதுமக்களின் கருத்தாக உள்ளது.

**தொகுப்பு :**
**தி.தண்ணீர்மலை,**
**ஆலங்குடி செய்தியாளர்**

## தென்காசி மாவட்டம் மாதாபட்டணம் ச.ச.வி. பள்ளியில் முப்பெரும் விழா

தென்காசி, செப் -11

தென்காசி மாவட்டம் மாதாபட்டணம் சற்குண சத்திய வித்யாலயா மேல்நிலை பள்ளியில் திருநெல்வேலி டான் சிட்டி லயன்ஸ் சங்கம் மற்றும் கடையம் பாரதி லயன்ஸ் சங்கம் இணைந்து ஆசிரியர் தினவிழா போதை ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் சங்கங்களின் கூட்டுக் கூட்டம் ஆகிய முப்பெரும் விழா நடை பெற்றது.இந்த நிகழ்சிக்கு திருநெல்வேலி டான் சிட்டி லயன்ஸ் சங்கத் தலைவர் லயன் ஜவர் துரை தலைமை தாங்கினார், பள்ளியின் நிர்வாக அலுவலர் அருட்தந்தை மைக்கேல் முன்னிலை வகித்தார், பள்ளியின் தலைமை ஆசிரியர் அமிர்த சிபியா அனைவரையும் வரவேற்றார், தென்காசி மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் நாகசங்கர் கலந்து கொண்டு பள்ளி மாணவர்கள் போதை பொருள் பயன் படுத்த கூடாது என்றும் அதனால் ஏற்படும் தீமைகள் பற்றியும்மாணவர்களிடம் விளக்கினார். மேலும் போதை எனக்கும் வேண்டாம் யாருக்கும் வேண்டாம் என்ற வாசகத்தை மாணவர்களின் மனதில் பதிய வைத்தார்.



இந்நிகழ்ச்சியில் கடையம் பாரதி லயன்ஸ் சங்கச் செயலாளர் லயன் தயாள லஷ்மணன், பொருளாளர் லயன் கோபால் மற்றும் லயன் அருணாசலம்,லயன் சுதாகர் கண்ணன்,லயன் இந்திரசித், லயன் இளங்கோ,லயன் பாஸ்கரன் ,திருநெல்வேலி டான் சிட்டி லயன்ஸ் சங்க இயக்குனர் டிகள் ராஜன், லயன் ராதாகிருஷ்ணன், லயன் ராஜன்,லயன் முகைதீன் காசிம்,லயன் சாமுவேல் பாக் கியராஜன்,லயன்ஆனந்தராஜ ன்,லயன் கொடிமுத்து,லயன் செல்வராணி லயன் குமரகுருபரன்,லயன் பக்ருதீன் அலி,லயன் சௌந்தரம் லயன் விக்டோரியா மற்றும் பள்ளியின் ஆசிரியர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

இந்த நிகழ்சிக்கான ஏற்பாட்டினை பள்ளியின் நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தோணி துரை ரராஜ், செஞ்சிலுவை சங்கத்தின் பொறுப்பாளர் ஆசிரியர் தமிழரசி, பள்ளியின் சாரணர் இயக்க பொறுப்பாளர்கள் ஆசிரியர் மோசஸ், ஆசிரியை சாந்தி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.முடிவில் பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் தங்கராஜன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# ஜி-20 உச்சி மாநாடு நிறைவடைந்தது: அடுத்த மாநாட்டுக்கு பிரேசில் தலைமையேற்கிறது





# இந்தியா, பாரத் சொற்களில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை

# நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள தயாராக வேண்டும்




| சென்னை / புதுக்கோட்டை | 11.09.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார்** , இந்திய வழக்கறிஞர், விடுதலைப் போராட்ட வீரர், அரசியல்வாதி (பி.1874) (இ.1941)



**டி. கே. சிதம்பரநாத முதலியார்** , வழக்கறிஞர், எழுத்தாளர், திறனாய்வாளர் (பி.1882) (இ.1954)



**ப. சுப்பராயன்** , சென்னை மாகாண முதல்வர் (பி.1889) (இ.1926)



**வினோபா பாவே** , இந்திய மெய்யியலாளர், காந்தியவாதி (பி.1895) (இ.1982)



## இன்றைய நினைவு நாள்

**சுப்பிரமணிய பாரதி** , தமிழகக் கவிஞர், ஊடகவியலாளர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1882) (இ.1921)



**இம்மானுவேல் சேகரன்** , ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளுக்காக போராடியவர் (பி.1924) (இ.1957)



**பொன். சிவபாலன்** , யாழ்ப்பாண மாநகர முதல்வர் (பி.1952) (இ.1998)

